# தமிழர் வாழ்வியலும் பால்நிலை மனப்பாங்கும் - ஓர் விவரண ஆய்வு

**[1]க.கஜானா, [2]ஞா.பிறிஸ்கா, [3]க.கஜவிந்தன்,**
[1,2,3]மெய்யியல் உளவியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச் சுருக்கம்**

பால்நிலை என்பது சமூக ரீதியாக ஆண்பால், பெண்பால் என வகுக்கின்றது. எனவேதான் பால்நிலை என்பது ஒரு சமூகத்தால் வழங்கப்படும் அங்கீகாரமாக கருதப்படுகின்றது. இது சமூகத்திற்கு சமூகம், கலாசாரத்திற்கு கலாசாரம், நாட்டிற்கு நாடு வேறுபட்டதாகவும் திகழ்கின்றது. இப்பால்நிலை குறித்த மனப்பாங்கானது தமிழர் வாழ்வியலில் பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுவதை தமிழ் இலக்கியங்களினூடாக நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இதனடிப்படையிலேயே பால்நிலை இயல்புகள் சமூக, கலாசார கட்டமைப்புக்களிற்கேற்ப உருவாக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. பெண் என்பவள் மென்மையானவள், அன்பானவள், இரக்கமுடையவள், கணவனுக்கு அடங்கி நடப்பவள், குழந்தை பெற்றுத் தருபவள், குடும்பத்தைப் பேணுபவள், கற்புநெறி தவறாதவள் எனவும், ஆண் என்பவன் உண்மையானவன், பொருளீட்டுபவன், வீரம், விவேகம், புத்திசாலித்தனம், தலைமைத்துவம் உடையவன் எனவும் பல பாலின இயல்புகள் சமூகத்தினால் உருவாக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டே பல சமூகங்களிலும், குறிப்பாக நமது தமிழ் சமூகத்தில் பெண்ணைத் தாழ்ந்தவளாகவும் ஆணை உயர்ந்தவனாகவும் சுட்டிக்காட்டும் போக்கு உணரப்பட்டுள்ளது. ஆயினும் இத்தகைய எண்ணக்கரு தற்காலத்தில் மாற்றம் பெறுவதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. எனவே இவ் ஆய்வின் நோக்கமாக அமைவது முன்னைய காலத்திலிருந்து தற்காலத்தில் பால்நிலை இயல்புகள் எந்தளவில் அமைந்து காணப்படுகின்றன, இப்பால்நிலை இயல்புகள் எந்தளவு மாற்றத்திற்குட்பட்டுள்ளது, அவை எந்தளவிற்கு தற்காலத்தில் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை ஆராய்வதாகும்.

இவ் ஆய்வானது யாழ் மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதுடன், முதல் நிலைத் தரவுகளாக அவதானமுறை, நேர்காணல்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. ஆய்வின் மாதிரிகளாக யாழ் மாவட்டத்தில் வசிக்கும் 300 நபர்களிடம் எழுமாறான அடிப்படையில் 25 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட திருமணமான, திருமணமாகாத ஆண்கள் 150 பேர் பெண்கள் 150 பேர் என பிரிக்கப்பட்டு தரவு சேகரிக்கப்பட்டது. விபரணமுறையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டதுடன் இவ் ஆய்வின் முடிவில் பால்நிலை இயல்புநிலை பற்றிய தற்கால சமூகக் கண்ணோட்டமானது யாழ் மாவட்டத்தினைப் பொருத்தவகையில் முன்னைய காலத்தினை விட பால்நிலை இயல்புகளின் அடிப்படையான எதிர்பார்ப்புக்களிலிருந்து குறிப்பாக பெண்களின் பால்நிலை இயல்புகள் சமூகத்தில் மாற்றமடைந்துள்ளது என முன்வைக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்** - பால்நிலை, தமிழர் வாழ்வியல், ஆண், பெண்

## ஆய்வு அறிமுகம்

தமிழர் வாழ்வியல் சங்கம் வளர்க்க முன்பே தோற்றம் பெற்றதாயினும் அதன் தெளிவான வரலாற்றை சங்ககாலத்திலிருந்தே அக்கால இலக்கியங்கள் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. ஒரு சமூகம் காலத்திற்கு காலம் நிலைத்திருக்க வேண்டுமாயின் அது தனக்கேயுரிய சில தனித்தன்மைகளை தன்னகத்தே கொண்டமைய வேண்டும். அந்தவகையில் தமிழர் சமூகம் கொண்டுள்ள கடமை, கட்டுப்பாடு, ஒழுக்க வரையறைகள், இறுக்கமான பேணப்படும் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் போன்றன தமிழர் வாழ்வியலின் பாற்பட்டதாகும். இத்தகைய தமிழர்

வாழ்வியலில் பால்நிலை மனப்பாங்கு என்பது சங்ககாலம் தொட்டு தற்காலம் வரையிலும் தொடரப்படுவதாகவே அமையப்பெறுகின்றன. இதற்கு சான்றாக சங்க காலம் தொட்டு இற்றைவரை வெளிவந்துள்ள இலக்கியங்களை குறிப்பிடலாம்.

**"பால்நிலை"** சமூகத்தால் உருவாக்கப்பட்டதொரு எண்ணக்கருவாகும். சிறுவர்கள், சிறுமியர்கள், ஆண்கள், பெண்களிற்கு வழங்கப்பட்ட சமூக கலாசார வரைவு பால்நிலை எனலாம். ஆண், பெண்களது கடமைகள், பொறுப்புக்கள், நடத்தைகள், வகிபங்குகள், உரிமைகள் என்பவற்றை வரையறுப்பவையாகக் இவை மிளிர்கின்றது. ஆண், பெண்ணினது நியமங்கள், பெறுமானங்கள் என்பவற்றைக் குறிப்பவையாகவும் பால்நிலை காணப்படுகின்றது.

குறித்த இவ்வாய்வின் தலைப்பிற்கமைய மனப்பாங்கு என்ற பதத்தினை வரையறை செய்ய வேண்டியது அவசியமானதாகும். அந்தவகையில், மனப்பாங்கு என்பது எம் வாழ்க்கையில் எதிர்கொள்பவற்றை மதிப்பீடு செய்ய நாம் அறிந்து கொண்ட ஓர் சார்பு நிலையாகும் என உளவியலாளர்கள் வரைவிலக்கணப்படுத்துகின்றனர். ஒவ்வொரு மனிதனும் குறித்த ஒவ்வொரு விடயங்கள் தொடர்பாகவும் வேறுபட்ட மனப்பான்மைகளை கொண்டிருப்பர். அது போன்றே பால்நிலை தொடர்பான மனப்பான்மைகளும் கால, சமூக மாற்றங்களிற்கேற்ப வேறுபட்டதாக அமைகின்றது எனலாம். தமிழர் வாழ்வியலிலும் இப் பால்நிலை மனப்பாங்கானது சங்க காலம் தொட்டு தற்காலம் வரையிலும் தாக்கம் செலுத்துவதை காணலாம்.

சமூகத்தினால் பால்நிலைக்கேற்ப வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளும், கட்டமைப்புக்களுமே பால்நிலை இயல்புகளாகும். பால்(sex) என்பது, உயிரியல் ரீதியாக இயற்கையான பிறப்பின் மூலம் பெறப்படுவது. இது ஆண், பெண் என உருவாக்கம் பெறுகின்றது. இவ் உயிரியல் கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு அவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என சமூகத்தால் உருவாக்கப்பட்டதே பால்நிலையாகும். பால்நிலை என்பது சமூகத்தினால் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, கற்பிக்கப்படுவதாகும். இப் பால்நிலை இயல்புகள் சமூகத்திற்கு சமூகம் வேறுபடுகின்றது.

மில்லர்(**Millor** என்பவர் 1940 இல் அமெரிக்க பெண்களில் மேற்கொண்ட ஆய்வில், பெண்களிற்கென வகுக்கப்பட்ட இயல்புகள் அவர்களிடம் காணப்படவில்லை. ஆகவே இவை சமூகத்தினால் கற்பிக்கப்படுவது" எனக் கூறினார். இவ்வாறாக ஒவ்வொரு சமூக, கலாசார, பண்பாட்டிற்கேற்ப பால்நிலை மனப்பாங்குகள் மாறுபடுகின்றன. பால்நிலை மனப்பாங்குகளினை மேலைநாடுகளுடன் ஒப்பிடும் போது தமிழர் வாழ்வியலில் பால்நிலை அசமத்துவத்தினை ஏற்படுத்துவதுடன் பால்நிலைசார் பல பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன.

எமது சமூகத்தில் ஆண்கள். பெண்கள் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என அவர்களது இயல்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஆண்கள் பலமானவர்கள், திடமானவர்கள், தலைமைத்துவம் மிக்கவர்கள், சுதந்திரமானவர்கள், துணிச்சலானவர்கள், பொருளீட்டுபவர்கள், அறிவானவர்கள் எனவும் பெண்கள் மென்மையானவர்கள், அன்பானவர்கள், பலவீனமானவர்கள், அடக்கமானவர்கள், தங்கிவாழ்பவர்கள் எனவும் பால்நிலை இயல்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வரையறுக்கப்பட்ட பால்நிலை இயல்புகளை அடிப்படையாகக்கொண்டே சமூகத்தில் அவர்கள் தம் நிலைகளைத் தக்கவைத்துக்கொள்ளவேண்டியுள்ளது. சமூகத்தின் இவ்வாறான பால்நிலை இயல்புகள்சார் எதிர்பார்ப்புக்கள் மீறப்படுகின்ற போது அவர்கள் பிறழ்வான நடத்தையாளர்களாகவும் நோக்கப்படுகின்றனர்.

இப்பால்நிலை மனப்பான்மைகளின் உருவாக்கமானது சமூகம் என்ற அமைப்பு தோற்றம் பெற்றதிலிருந்தே காணப்படுகிறது. இந்த வகையில் சங்க இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள், திருக்குறள் போன்ற அறநூல்கள் என பல பழந்தமிழ் இலக்கியங்களிலும் மற்றும் நாட்டுப்புற இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள், பழமொழிகள் வரையிலும் தமிழர் வாழ்வியலில் பால்நிலை மனப்பாங்குகள் பற்றி எடுத்துக்கூறப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தற்காலத்தில் தமிழர் வாழ்வியலினைப் பொறுத்தவரையில் பால்நிலை சமத்துவம், பெண் உரிமைகள் எனப் பரவலாகப் பேசப்பட்டாலும் முழுமையான பால்நிலை சமத்துவம் பெறப்படவில்லை. இதற்கு அடிப்படையாக அமைவது தமிழ் சமூகத்தினால் வளர்த்தெடுக்கப்பட்ட பால்நிலை மனப்பான்மைகளே ஆகும். பெண்களின் கல்வி, தொழில்நிலைகள் என பெண்களின் சார்பில் சில மாற்றங்கள் தற்காலத்தில் தமிழர் சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் மறைமுகமாக குடும்பம், சமூகம், கல்விநிலைகளில் பால்நிலை மனப்பாங்குகளின் செல்வாக்கு காணப்படுவதாகவே உள்ளது.

வெளிப்படையாக பெண்களிற்கான உரிமைகள் வழங்கப்பட்டு, சுயமாக செயற்படுகிறார்கள் என நாம் எண்ணினாலும்கூட மறைமுகமாக பெண்கள் ஆண்களிற்கு கீழ்ப்படிந்தவர்களாகவே காணப்படுகின்றனர். குடும்பத்தினை எடுத்துக்கொண்டால் பெண்பிள்ளைகளைக் காட்டிலும் ஆண் பிள்ளைகளிற்கே அதிகளவில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. மூத்த பிள்ளை பெண்ணாக இருந்தாலும் குடும்பத்தில் இளைய ஆண்பிள்ளைகளின் தீர்மானங்களிற்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இதற்கு சமூகத்தால் வகுக்கப்பட்ட பால்நிலை மனப்பாங்குகளே அடிப்படை காரணமாகும்.

இவ்வாறாக தொழில் நிலைகளிலும் உயர் அதிகாரிகளாகப் பெண்களிருந்தாலும் தம் கீழ்நிலையில் உள்ள ஆண் அதிகாரிகளின் ஆலோசனைகளின் மூலமே தீர்வுகளை மேற்கொள்கின்றனர். இந்நிலை ஆண்களே தீர்மானம் எடுக்கத் தகுதியானவர்களென்ற ஆண்நிலை இயல்பினைக் எடுத்தியம்புகின்றது. சமூகத்தில் ஆண்கள் வீரமானவர்களாக, தைரியமானவர்களாக நோக்கப்படுகின்றனர். இத்தகைய இயல்பு நிலைகளிலிருந்து தவறும் ஆண்களை சமூகம் பெண்தன்மையானவர்கள், பிறழ்வானவர்கள் என கேலி செய்கிறது. அத்துடன் பொருளாதார நிலையில் ஆண்களே பொருளீட்டுபவர்களாகவும், குடும்பப் பொறுப்புடையவர்களாகவும் நோக்கப்படுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தில் பெண்கள் ஆண்களின் உழைப்பினையே எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். இந்நிலை பெண்கள் அனேகமானோரில் உள சமூக தாக்கத்தினை ஏற்படுத்துவதாக உள்ளது.

தற்காலங்களில் அனேகமாக விவாகரத்து என்பது தமிழர் சமுதாயத்தில் இயல்பானதொன்றாக மாறிவருகின்றது. இதற்கு காரணமாக அமைவது பால்நிலை மனப்பாங்குகளின் தாக்கமாகும்.அதாவது ஆண்கள் பெண்களை தமக்குச் சமனாக ஏற்க மறுப்பதுடன், பெண்கள் ஆண்களிடம் அதிகளவான எதிர்பார்ப்புக்களை கொண்டுள்ளதாலும் அனேகமான குடும்பங்கள் பிரிந்து செல்கின்றன.மேலும் தமிழ் சமூகத்தினைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் பெண்கள் தனித்து வாழவோ, மணமுறிவினை மேற்கொள்ளவோ இப் பால்நிலை மனப்பாங்கானது இடம் கொடுக்கவில்லை. ஆனால் தற்காலத்தினைப் பொறுத்தவரையில் இப்பால்நிலை மனப்பாங்கானது தமிழர் வாழ்வியலில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவே அமையப்பெறுகின்றது.

தற்காலத்தில் தமிழ் சமூகங்களில் மலிந்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், வன்நடத்தைகள் என சமூக விரோத செயல்களிற்கும் பால்நிலை இயல்புகளே அடிப்படையாக உள்ளது. நெடுங்காலமாகவே சமூகத்தினால் கற்பிக்கப்பட்டு வருகின்ற இவ்வாறான

பால்நிலை இயல்புகள் ஆண்களையும் சரி பெண்களையும் சரி அவர்களை அந்நிலையிலிருந்து மீளத் தடுக்கின்றது. இதற்கு பிரதான காரணம் ஒருவரது பிறப்பு முதலே பால்நிலை இயல்புகள் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்துவிடுகின்றன. இந் நிலையிலிருந்து மீள வேண்டுமானால் ஒவ்வொருவரும் தம் உளநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் தாம் ஆண்களிற்கு கீழானவர்கள் என எண்ணும் போதே ஆண்கள் மேலானவர்களாகின்றனர். எனவே பெண்களே முதலில் தம் மன நிலையினை மாற்றி முன்வர வேண்டும். ஆனால் பல பெண்களிடம், தம்மால் ஆண்களைவிட சிறப்பாகச் செயல்பட முடியும் என்ற உணர்வு, தைரியம் உள்ள போதும் அவர்கள் சமூக ரீதியாகவும் உளரீதியாகவும் மீள முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு பெண் தன்னை துணிச்சலான, பலசாலியாக காட்டிக்கொள்கின்ற போது அப்பெண்ணை வித்தியாசமானவளாக அல்லது பெண் என்ற வகையினுள் நோக்காது அவளது ஆளுமைகள் மூழ்கடிக்கப்படுகின்றன. அவ்வாறே ஆண் தனது குடும்பத்தில் தங்கி வாழ்கின்ற போது அவனை மதிப்பதில்லை. இந்நிலையானது நாம் சமூகத்தினால் விதிக்கப்பட்ட பால்நிலை இயல்புகளிலிருந்து மீள நினைத்தாலும் எம் மனக்கட்டுப்பாடு, சமூக எதிர்பார்ப்புக்கள் அவ் இயல்புகளிலிருந்து நாம் மீள இடமளிப்பதில்லை.

பெண் என்பவள் தன் பால்நிலை இயல்புகளுடன் ஆண்களிற்கு கீழ்ப்படிந்து நடக்கும் போதுதான் ஆணானவன் மேல்நிலை அடைகின்றான். எனவே இருபாலரும் உடலால் வேறுபட்டவராகக் காணப்பட்டாலும் கடமைகள், உரிமைகள், பொறுப்புக்கள் சமமாகவே நோக்கப்பட வேண்டும். இவ்வாறு சமத்துவம் ஏற்படுவதற்கு சமூகத்தினால் உருவாக்கப்பட்ட பால்நிலை இயல்புகளைப் புறந்தள்ளி இருபாலரும் உடலமைப்பினால் வேறானவர்களாயினும் உளத்தால் சமமானவர்கள் என்ற உள மாற்றத்தினை கொண்டுவர வேண்டும். இதற்கு குடும்பம், பாடசாலை மட்டத்தில் பாகுபாடுகளைக்காட்டாது சமமாக நோக்கப்பட வேண்டும். ஆயினும் சமூக எதிர்பார்ப்புக்களிலிருந்து மீறும் பட்சத்தில் அவர்கள் முறையான வாழ்விற்கு தகுதியற்றவர்களாவே நோக்கப்படுகின்றனர்.

பால்நிலைகளின் அடிப்படையில் ஒவ்வொருவரும் தம்மை கட்டுப்படுத்தி வாழ்கின்றபோது அவ்வாழ்க்கை ஆரோக்கியமற்ற சுதந்திரமற்றதாகக் காணப்படுகின்றது. இதனால் ஒருவர் தன் முழுமையான ஆளுமையினை வெளிப்படுத்த பால்நிலை மனப்பாங்குகள் தடையாக உள்ளன. அவ்வாறன்றி ஒருவர் தன் பால்நிலை இயல்பிலிருந்து விலகுகின்ற போது சமூகத்தின் கண்டனங்களிற்குள்ளாவதுடன் மனஅழுத்தம், சோர்வு, தாழ்வு மனப்பான்மை போன்ற உளப் பிரச்சினைகளிற்கும் ஆளாகின்றார்.

எனவே எந்தளவுதான் தொழில்நுட்ப வளர்ச்சியடைந்து மனிதன் பலமுன்னேற்றங்களை அடைந்தாலும் தமிழர் வாழ்வியலில் அதிகளவில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பால்நிலை மனப்பாங்குகளின் தாக்கம் காணப்பட்ட வண்ணமே உள்ளது. இப்பால்நிலை மனப்பாங்குகள் சமூக எதிர்பார்ப்புக்களாக, ஒவ்வொரு தனிமனிதனிலும் சிறுவர்களிலிருந்து பெரியவர்கள் வரை தாக்கம் செலுத்துபவையாகக் காணப்படுகின்றது. எனவே சமூகத்தினால் வளர்த்தெடுக்கப்பட்ட பால்நிலை இயல்புகளிலிருந்து விடுபட்டு ஒவ்வொருவரும் தம் உள்ளத்தால் தாமே உணர்ந்து பால்நிலை சமத்துவத்தினை ஏற்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான, ஆளுமைமிக்க தமிழர் சமுதாயத்தினை உருவாக்க முடியும்.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வின் நோக்கமாக அமைவது யாழ் மாவட்டத்தினைப் பொருத்த வரையில் முன்னைய காலத்தினை விட தற்காலத்தில் எவ்வாறான வகையில் பால்நிலை மனப்பாங்குகள்

மாற்றமடைந்துள்ளது என்பதனையும், இம் மாற்றங்கள் சமூகத்தில் எந்தளவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதனையும் ஆராய்வதாக உள்ளது.

**ஆய்வு வரையறை**

பால்நிலை மனப்பாங்குகள் சமூகத்திற்கு சமூகம், நாட்டிற்கு நாடு மாறுபட்டதாக, பரந்துபட்டதாக காணப்பட்டாலும் தற்காலத்தில் பால்நிலை மனப்பாங்குகள் எந்தளவிற்கு மாற்றமடைந்துள்ளது என்பது பற்றிய இவ் ஆய்வானது யாழ்மாவட்டத்தினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது.

**ஆய்வு முறையியல்**

யாழ் மாவட்டத்தில் பால்நிலை மனப்பாங்கு பற்றிய மாறுபாடுகள் தொடர்பான தரவுகளை பெற்றுக் கொள்வதற்காக முதனிலை தரவுகளாக நேர்காணல், அவதான முறை என்பன பயன்படுத்தப்பட்டன. ஆய்வு மாதிரிகளாக யாழ் மாவட்டத்தில் வசிக்கும் 300 பேரிடம் எழுமாறான அடிப்படையில் 25 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட திருமாண, திருமணமாகாத ஆண்கள் 150, பெண்கள் 150 என பிரிக்கபட்டு தரவு சேகரிக்கபட்டு விபரண முறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் தமிழர் வாழ்வியலில் பால்நிலை மனப்பாங்குகள் எந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை ஆராய்வதற்கு இரண்டாம் நிலைத் தரவுகளாக இலக்கியங்கள், நூல்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பகுப்பாய்வு**

பிறப்பில் உண்டான உறுப்பு வேறுபாடுகள் காரணமாக மனித குலம் ஆண், பெண் என வேறுபடுத்தி நோக்கவில்லை. சமூகம் கற்பிக்கும் பண்பாடுகள், அதன் அடிப்படையிலான நடத்தைகளே ஆணையும், பெண்ணையும் அதிகம் வேறுபடுத்தி காட்டுகின்றன. சமூகத்தில் ஆண், பெண் இருபாலரும் சில நடவடிக்கைகளில் ஒன்றுபடுகின்றனர், பலவற்றில் வேறுபடுகின்றனர். ஆணுக்கென்று சில நடத்தைகளும், பெண்ணுக்கென்று சில நடத்தைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. மரபு என்ற பெயரால் அந்நடவடிக்கைகள் காலங்காலமாக, தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்பட்டு போற்றப்பட்டு வருகின்றன.

சமூகத்தின் இந்த போக்கை சைமன்-டி, பௌவாயர் என்ற பிரெஞ்சு பெண்ணியவாதி முதன் முதலில் கண்டுரைத்தார். அவர்

**'பெண் என்பவள் பிறப்பதில்லை,**

**உருவாக்கப்படுகின்றாள்'** (1)

என சமூக பார்வையின் அடிப்படையில் கோட்பாடு ஒன்றை உருவாக்கித் தந்தார். ஆண், பெண் இருபாலரில் ஆடவன் ஆண்மைப்பண்பை பின்பற்ற கற்பிக்கப்படுகின்றான். இவ்விரு சாராரும் பால்சார்ந்த பழக்கவழக்கங்கள் இருந்தால் மட்டுமே அவர்கள் பிறரால் மதிக்கப்படுகின்றனர். ஆணின் நடத்தையை பெண்ணும், பெண்ணின் நடத்தையை ஆணும் பின்பற்றும் போது அவர்கள் சமூகத்தின் எள்ளலுக்கும், தூற்றலுக்கும் ஆட்படுகின்றனர். அவ்வகையில் சமூகத்தால் வகுக்கப்பட்ட ஆண்மைப் பண்புகளாக உடல் வலிமை, எளிதில் உணர்ச்சி வயப்படாமை, வாதத்திறம், பகுத்தறிவு, புறநோக்கு, அறிவுடைமை, தலைமைப்பண்பாளர், தன்னிச்சையாக வாழ்பவர், பணமீட்டல் போன்றனவும் பெண்மை பண்புகளாக மென்மை, உணர்வு வயப்படல், உள்ளுணர்வால் இயக்கப்படுபவர்கள், சார்பாளர், அடிமை, ஆதரவில் வாழ்வோர், கற்புடைமை, பாதுகாப்பிற்குடையவர், குடும்பம் பேணல் போன்றனவும் சமூகத்தால் வகுக்கப்பட்டுள்ளன.

எம் தமிழர் சமுதாயத்தில் பால்நிலை மனப்பாங்கு பற்றி வரலாற்று ரீதியாக நோக்கும் போது பால்நிலை என்பது சங்க காலம் தொட்டு தற்காலம் வரையும் தொடரப்பட்டு வருவதாகக் காணப்படுகின்றது. சங்க காலத்திலேயே தாய் வழி சமூகம் சிதைக்கப்பட்டு தந்தை வழி சமூகம் உருவாக்கப்பட்டது. அகம், புறம் என்ற இரு எதிரினைகளால் உருவாக்கப்பட்ட சமூக இருப்பில் ஆணின் ஆதிக்கம், அதிகாரப்பிணைப்பிற்குள் பெண் அடங்குகிறாள். பெண் வீட்டினுள் அடைந்தும், ஆணின் நுகர்வுப் பொருளாகவும் அவனின் ஆளுமைக்கு அடிப்பணிபவனாகவும் ஆட்படுத்தப்படுகிறாள். இத்தகைய பால்நிலை மனப்பாங்குகளை கொண்டே தற்காலம் வரையிலும் இவை வளர்ச்சியடைந்து வந்துள்ளன. முன்னைய காலங்களில் பால்நிலை மனப்பாங்குகள் எந்தளவு இறுக்கமாக காணப்பட்டது என்பதை அறிய அக்கால இலக்கியங்கள் துணை புரிகின்றன. அக்காலங்களில் பால்நிலை மனப்பாங்குகள் அடிப்படையில் பெண்கள் அதிகளவில் ஒடுக்கி ஆழப்பட்டவர்களாகவும், ஆண்கள் அதிக சுதந்திரம் கொண்டவர்களாகவும் காட்டப்பட்டுள்ளனர். அத்துடன் பெண்களுக்கு ஒருவனுக்கு ஒருத்தியென்ற கற்புநெறி மற்றும் தம் கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறுதல், கைம்மை நோம்பு ஏற்று, கூந்தல் கொய்து, வளையல் நீக்கி தம் அழகை அழித்தலும் வலியுறுத்தப்பட்டது.ஆண்களுக்கு வீரம் என்பது அவர்களின் மூச்சு எனவும், ஆண்கள் தம் மனைவியரை விட்டு பரத்தையருடன் சென்று வருவதை மனைவியர் ஏற்றனர் எனவும் சங்ககால இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

**பால்நிலை மனப்பாங்குகள் தொடர்பான ஆரம்பகால கண்ணோட்டம்**

1. **பிறப்பு**

**'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' (2)**

என்ற வள்ளுவர் குறளிலே பிறப்பிலே எல்லோரும் சரிநிகர் சமானம். ஆணோ, பெண்ணோ பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்கின்றது திருக்குறள். ஆரம்ப காலத்தில் குழந்தை பிறந்ததிலிருந்தே ஒரு சமூகத்தால் பால்நிலை மாறுபாடுகள் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்து விடுகின்றது. அவ்வகையில் பெண் குழந்தைகள் பிறந்ததும் அவர்களை இழிபிறவிகளாகக் கருதி 'கள்ளிப்பால்' ஊட்டி கொலை செய்யும் கலாசாரம் எம் சமூகத்தில் காணப்பட்டுள்ளது. ஆண்குழந்தை பிறந்ததும் கற்கண்டு கொடுப்பதும், பெண்பிள்ளை பிறந்ததும் இனிப்புப்பண்டம் கொடுப்பதும் பால்நிலை மனப்பாங்கினை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. அதாவது பெண்பிள்ளை பிறந்தால் செலவு அதிகம் என்பதையே இது எடுத்தியம்புகின்றது. மேலும் ஆண் குழந்தை எனில் அப்பிள்ளைக்குரிய பொருட்கள் அனைத்தும் நீலநிறத்திலும் பெண் பிள்ளை எனில் அப்பிள்ளைக்குரிய பொருட்கள் அனைத்தும் இளஞ்சிவப்பு நிறத்திலும் கொள்வனவு செய்யப்படும். இவை பிறப்பிலிருந்தே நம் சமூகத்தில் பால்நிலை மனப்பாங்குகளில் செல்வாக்குச் செலுத்துகின்றமையை அறிய முடிகின்றது. இத்தகைய பால்நிலை மனப்பாங்குகளை தமிழர் வாழ்வியலில் தற்காலத்திலும் கூட கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

2. **சடங்கு முறைகள்**

தமிழர் வாழ்வியலின் சடங்கு முறைகளிலும் பால்நிலை மனப்பாங்குகள் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. பிறப்பினூடான உறுப்பு வேறுபாடுகள் காரணமாக மனித குலத்தில் ஆண், பெண் இருவருமே பூப்படைதல் என்ற நிலைக்கு உட்படுகின்றனர். இருப்பினும் கூட சமூகம் கற்பித்த பால்நிலை மனப்பாங்குகள் இவற்றிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது பெண் பருவமடைந்ததன் பின்னர் அவர்களுக்கான கட்டுப்பாடுகள் அதிகரிக்கின்றன. பூப்படைந்ததின் பின் பெண்களை தனியாக வெளியே விடுவதில்லை, கற்றல் இடைநிறுத்தம்,

பலவகையான மூட நம்பிக்கைகளால் பெண்களை ஒடுக்குகின்றனர். இவ்வாறான பால்நிலை ரீதியிலான மனப்பாங்குகள், பெண்கள் பலவீனமானவர்கள், பாதுகாப்பிற்குரியவர்கள் என்ற உணர்வினை ஏற்படுத்துகின்றது. ஆனால் இவ்வாறான கட்டுப்பாடுகள் எதுவும் ஆண்களிற்கில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 3. திருமணம்

திருமணம் என்பது தமிழர் வாழ்வியலில் ஓர் முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது. இதிலும் பால்நிலை மனப்பாங்கானது பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆண், பெண்களுக்கான வரையறைகள் அனைத்துமே திருமண வாழ்வினுள்ளேயே அடங்கியுள்ளது எனக் கூறலாம். தமிழ் சமூகத்தினைப் பொறுத்தவரையில் பால்நிலை மனப்பாங்கின் அடிப்படையில் திருமணம் என்பது பெண்ணிற்கு பெருமை சேர்ப்பதாவே நோக்கப்படுகின்றது. அதாவது முன்னைய காலங்களில் பெண்கள் பூப்பெய்தியவுடனேயே திருமணம் செய்து வைக்கப்படும். பெண்கள் ஆண்களின் காம இச்சையை தீர்ப்பவளாகவும், பணிவிடை செய்பவளாகவும், பிள்ளைகளை பெற்று வளர்ப்பதற்காகவுமே உருவாக்கப்பட்டவள் **“ஈன்று புறத்தருதல் என்தலைக்கடனே”(புறநானூறு)** என சமூகமானது பால்நிலை மனப்பாங்கினை உருவாக்கியுள்ளது. மேலும் ஆண்கள் தலைமைத்துவமுடையவர்களாகவும் பொருளீட்டுபவர்களாகவும் நோக்கப்பட்டனர்.

அத்துடன் ஆண்களிற்கு பலதாரமணம் என்பது அங்கீகரிக்கப்பட்டதுடன், பெண்கள் பலதாரமணமோ, மறுமணம் செய்வதோ தடைசெய்யப்பட்டிருந்தது. ஆயினும் மகாபாரதத்தில் ‘‘திரௌபதை பஞ்சபாண்டவர்களையும் மணக்கிறார். இங்கு திரௌபதைக்கு தான் விரும்பிய ஒருவரையோ அல்லது இருவரையோ மட்டும் தேர்ந்தெடுக்க உரிமை வழங்கப்படவில்லை.’’ எனவே சமூக அடிப்படையில் திருமணம் என்பது ஆண்களைப் பொறுத்தவரையில் ஆதிக்கப்போக்குடையதாகவும், பெண்கள் அவர்களின் அடிமைகளாகவும் அமையப்பெற்றிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக அகத்திணை இலக்கியத்தின்,

**“விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்,**

**அரு நெறி ஆயர் மகளிர்க்கு இருமணம் கூடுதல் இல் இயல்பின்றே” (முல்லைக்கல்114)**

என்ற பாடல் வரிகள் ஆண்களால் பெண்ணிற்கு இருமணம் மறுக்கப்பட்ட நிலையினை எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் கணவனை இழந்த பெண்கள் உடன்கட்டை ஏறல், மொட்டையடித்தல் போன்ற செயல்கள் பெண்ணடிமைத்தனத்தினை உருவாக்கியது. இதனை சங்கப்பாடலான,

**“கூந்தல் கொய்து, குறுந்தொடி நீக்கி,**

**அல்லி உணவின் மனைவி”(3)**

என தாயங்கன்னியார், தன் பாடலில் கணவன் இறந்த பின் மனைவி கைம்மை ஏற்று, கூந்தல் கொய்து, வளையல் நீக்கி அல்லியரசியாக உணவு உண்பார் எனக் கூறியுள்ளார். அதே சமயம் தன் மனைவியை இழந்த கணவனானவன் சமூக ஏற்புடைமையுடன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்ய உரித்துடையவனாகின்றான். இவ்வாறே திருமணச்சடங்கு போன்ற மங்கள நிகழ்வுகளில்கூட குழந்தைப்பேறுள்ள பெண்ணுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதை **‘‘முதுசெம்பெண்டிர்’’ ‘‘புதல்வன் பயந்த மகளிர்’’** எனும் அகநானூற்று பாடல்வரிகள்(85) விளக்குகின்றது. மாறாக தம்பதிகள் குழந்தையற்று இருக்கும்போது அதற்கு பெண்களையே காரணம் காட்டி அவளுக்கு ‘மலடி’ என்ற

பட்டத்தை வழங்கி அவளை முடக்குகின்றது. ஆண்களிற்கு இந்நிலையில் எவ்வித குறைகளையும் பெரிதுபடுத்தி குறிப்பிடுவதில்லை. மேற்படி இக் கருத்துக்கள் ஆணாதிக்க சமூகத்தை நிலைநாட்டினாலும் கூட தமிழ் சமூகத்தால் வகுக்கப்பட்ட பால்நிலை மனப்பாங்குகளே இந் நிலைமைக்கு அடிப்படைக்காரணமாகின்றன.

திருமணத்தில் வரதட்சணை என்பதும் பால்நிலை மனப்பாங்கில் வேறுபாட்டினைக் காட்டுவதாகவே உள்ளது. பெண்கள் பலவீனமானவர்கள், பொருளாதார பலமற்றவரகள் என்பதாலும், ஆண்கள் மேலானவர்கள், பெருமைக்குரியவர்கள் என்ற பால்நிலை மனப்பாங்கின் நோக்கில் வரதட்சணை என்பது பெண்களின் திருமண வாழ்வில் சவாலானதாகவே அமையப்பெற்றுள்ளது. பெண்ணின் பெற்றோர்கள் பொருளில்லாதவராயினும் பொன்னைக் கொடுத்தேயாகவேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது.

**“ஐந்து வயதில் சாக்லேட்டும்**
**பத்து வயதில் பாவாடையும்**
**பதினைந்து வயதில் பாலிஸ்டர் சேலையும் வாங்கித் தந்த அப்பாவால்**
**இருபது வயதில் ஒரு இன்ஜினியர் மாப்பிள்ளையை**
**வாங்கித் தர முடியவில்லையே!” (4)**

என ஏங்கும் பெண்களின்நிலை பால்நிலை மனப்பாங்கின் எதிர்பார்ப்பின் விளைவாக அமைகின்றது. பெண்ணானவள் தன் கணவனுக்கு அடிபணிந்து வாழ வேண்டும் என்ற நிலைப்பாடு காணப்படுகின்றது.

**“மனைவிழைவார் மாண்பயனெய்தார் வினைவிளார்**
**வேண்டாப் பொருளுமது” (5)**

என்ற குறள் மனைவி சொல் கேட்பவன் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாதிருப்பதுடன் பயன்களையும் அடைய மாட்டான் எனக் கூறுகின்றது. இதில் பெண்கள் அறிவு, சிந்தனையாற்றல் அற்றவர்கள் என்பதைக் குறிப்பதாயுள்ளது.

4. **கல்வி**

தமிழர் வாழ்வியலில் ஆரம்ப காலங்களில் கல்வி என்ற எண்ணக்கருவில் பால்நிலை வேறுபாடுகளைக் கொண்டதாகவே காணப்பட்டுள்ளது. கல்வியானது ஆண், பெண்களிற்கு சமமாக அளிக்கப்படவில்லை. சிறு வயதில் பெண்கள் பள்ளிக்குச் சென்றிருந்தாலும் அவர்கள் பருவமடைந்த பின் கல்வியுரிமை மறுக்கப்பட்டது. ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துவதற்காகவே அவர்களின் கல்வியுரிமை மறுக்கப்பட்டதாக நோக்கப்படுகின்றது. இருப்பினும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பெண்களே இப்பால்நிலை மனப்பாங்குகளைத் தாண்டி கல்வியில் கரைகண்டோராகக் காணப்படுகின்றனர்.

**“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு” (6)**

என்பதில் கல்வியைப் பற்றிக் கூறுகின்றார் வள்ளுவர், வாழும் மக்களுக்கு எண், எழுத்து என்ற இருவகைக் கலைகளும் கண்கள் என்று சொல்லத்தக்கவை என்று சான்றோர் கூறுவர். கல்வி ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் என்பது குறலாள் நெறி. இவ்வாறாக பண்டைக்காலங்களில் கல்வி என்பது அனைவருக்கும் சமமானதாகக் கூறப்பட்டாலும் எம்சமூகத்தில் பெண்களிற்கான கல்வியுரிமை அக்காலங்களில் பெரிதும் மறுக்கப்பட்டமைக்கு பால்நிலை மனப்பாங்குகளே முக்கிய காரணமாகும்.

**5. கற்பு**

கற்பு என்பது பால்நிலை மனப்பாங்கு அடிப்படையில் தமிழர் வாழ்வியலில் பெண்ணுக்கென வகுக்கப்பட்ட பண்பாட்டு அடிப்படையிலான சமூகக் கட்டுத் திட்டமாகும். பெண்ணிற்கு இல்லம் என்பதை உரிமையாக்கி, அதனுள் அவள் இயக்கத்தைக் கட்டுப்படுத்தியது இக் கற்புக் கோட்பாடு. இக் கற்புக் கோட்பாடு பெண்ணொருத்தி சமூகத்தை நேரடியாக அணுகத் தடைக்கல்லாயிற்று. அவளைச் சுயசார்பு அற்றவளாக, ஆடவன் கைப்பாவையாக, ஆணின் ஒட்டுண்ணியாக உருவாவதற்கும் துணை போயிற்று. பாலினங்கள் அடிப்படையிலான அதிகார உறவுகள் வளரவும், பெருகவும் காரணமாயிற்று. **“பெற்றோரும் கொண்டானும் கற்பித்தவழி ஒழுகுதல்”** என கற்பினை பெண்களுக்குரியதென்று நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ச் சமுதாயம் பெண்களை “கற்பைப் போற்று” கற்புடையவளாக வாழ் என்று சொல்லிச் சொல்லியே அவர்களை அவ் வாழ்வின் மீது மாற்ற இயலாத விருப்பம் உடையவர்களாகத் தயார்படுத்தியது. மரபு ரீதியான இப் பெண்ணடிமை கருத்துருவம் காலம் செல்லச் செல்ல உளவியல் சார்ந்து வலுப்பெற்றது. தான் மெலியாள், கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட வேண்டியவள், வீட்டைவிட்டு வெளியே வரத் தகாதவள், எல்லாப்பருவத்திலும் ஆண் மகன் துணை வேண்டுபவள் என்ற எண்ணத்தை பெண்களிடையே ஏற்படுத்தியது.

**“கற்பும் கபமமுங் நற்பா லொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையம் வல்லிதின்**
**விரும்புறத் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்” (7)**

என்பதில் பெண் கற்பைப் பாதுகாப்பதும், அதனூடாக சமூக அங்கீகாரத்தைப் பெறுவதும் அவளின் ஒழுக்கமாக இருந்தது. ஆனால் இங்கு ஆணின் ஒழுக்கம் கோரப்படவில்லை. ஆணின் செயல்களை பெண் அங்கீகரித்து இணங்கிப் போவதே பெண்ணின் ஒழுக்கமாகியது.

**“பரத்தமை மறுத்தல் வேண்டியுங் கிழத்தி**
**மடத்தகு கிழமை உடமையானும்**
**அன்பிலை கொடியை என்றலும் உரியவள்” (8)**

என்பதில், ஆண் விபசாரியிடம் போய்வந்தாலும் பெண் அதைச் சகித்து வாழவும், கணவனுக்கு அன்பாக பணிவிடை செய்யவும் ஆணாதிக்க ஒழுக்கம் பெண்ணுக்கு உபதேசிக்கின்றது. இவ்வாறாக பால்நிலை மனப்பாங்கில் ஆணிற்கு பெண் கீழ்மையானவள் என்ற அடிப்படையில் அக்காலம் தொட்டு ‘கற்பு’ என்பது பெண்களிற்குரித்துடையதாயிற்று.

**6. பொருளாதாரம்**

சொத்துக்களுக்கும், பெறுமதிமிக்க பொருள்களுக்கும் அக்காலங்களில் ஆண்களே உரிமையாளர்களாகக் காணப்பட்டார்கள். பெண்களின் பிறப்பை அவலமாகக் கருதிய அக் காலகட்டத்தில் பொருளீட்டல். சொத்துரிமைகொள்ளலில் பெண்களிற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. சமூக நோக்கில் கூலி வாங்காத தொழிலாளியாகவே குடும்பத்தில் பெண்கள் நோக்கப்பட்டனர்.

பெண்களின் உழைப்புக்கள் நேரடியாகவே சுரண்டப்பட்டன. இங்கு பால்நிலை மனப்பாங்கானது பெண்ணை வீட்டு வேலைக்காகவும், சமூக உழைப்பிற்கு தகுதியற்றவளாகவுமே நோக்கியது.

லெனினின் கருத்துப்படி, **'வீட்டுவேலை பெண்ணை நசுக்குகின்றது, கழுத்தை நெரிக்கின்றது,வளர்ச்சியைத் தடுக்கின்றது,மதிப்பிழக்கச் செய்கின்றது.சமையல்கட்டு, குழந்தைப் பராமரிப்பு,ஆகியவற்றோடு சங்கிலியால் பிணைக்கப்பட்ட பெண்களுடைய வேலையின் தன்மை காட்டுமிராண்டித்தனமானது. விளைபயனற்றது, அற்பத்தனமானது, மன உளைச்சலைத் தருவது, சோர்வடையச் செய்வது' (8)** என பெண்களின் அடிமைத்தனமான சமூக பால்நிலை மனப்பாங்கினை கூறியுள்ளார்.

தமிழ் சமூகத்தினைப் பொறுத்தவரையில் பால்நிலை மனப்பாங்குகள் ஆண்களுக்கென சில இயல்புகளை வகுத்தது. அந்தவகையில் ஆணாணவன் தன் உணர்ச்சிகளை குறிப்பாக அழுதல் கூடாது என வகுக்கப்பட்டது. ஆண்பிள்ளைகள் உணவு உண்ட பின்னரே பெண் பிள்ளைகள் உணவு உண்ண வேண்டும் என வகுத்தது மட்டுமன்றி பிரச்சினைகளைத் தீர்த்தல் விடயங்களிலும் ஆண்களுக்கே முதன்மையளிக்கப்பட்டது. இதன் அடிப்படையாக அமைவது ஆண்களே மேலானவர்கள், அறிவுடையவர்கள் என்ற பால்நிலை மனப்பாங்காகும். இங்கு ஆண் தலைமைப்பண்பாளராகவும் பெண்ணாணவள் சார்பாளர் , அடிமை என்ற ரீதியிலும் நோக்கப்பட்டார்கள். மேலும் பெண்களின் விருப்பு, வெறுப்புக்களுக்கு குடும்பங்களில் முக்கியத்துவம் வழங்காதநிலையும் காணப்படுவதைக் குறிப்பிடலாம்.

பால்நிலை மனப்பான்மையின் அடிப்படையில், ஆண்மகன் வீரனாக, கொடை வள்ளலாக, கல்விமானாக, நாட்டையும் வீட்டையும் காப்போனாக, பெருந்தன்மை உடையோனாக பெருமையாகப் பேசப்பட்டான். பெண்களிற்கான இயல்புகள் இவற்றிக்கு மாறுபட்டவை. குறிப்பாக பெண் இல்லத்தவள், மனையாள், பிள்ளைகளைப் பராமரிப்பவள், அச்சம், மடம், நாணத்திற்கு உரித்தானவள் என்றே பேசப்பட்டாள். தன் பாலியல் இச்சைகளை போக்கும் நோக்கில் ஆணாணவன் பிற பெண்களுடன் உறவாடுவதை அவ்வளவாக அலட்டிக்கொள்ளாத சமூகம் பாலியல் தொழில்களில் ஈடுபடும் பெண்களை மட்டும் ஒழுக்கம் கெட்டவளாக சித்திரிக்கின்றது. ஆணின் விபசாரத்தை பெண்கள் ஏற்றுப்போக இப் பால்நிலை மனப்பான்மைகள் வழிவகுக்கின்றன.

இவ்வாறாக பால்நிலை மனப்பாங்குகள் தொடர்பாக குறிப்பிட்ட சிலவற்றை இங்கு விரிவாக நோக்கியுள்ளோம். இதனடிப்படையில் தமிழ் சமூகத்தினால் உருவாக்கப்பட்டு கற்பிக்கப்பட்டு வளர்ந்து வந்துள்ள இப்பால்நிலை இயல்புகள் தற்காலத்தில் குறிப்பிட்டளவு மாற்றங்களிற்குட்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அந்தவகையில் கல்வி, பொருளாதாரம், திருமணம், வேலைவாய்ப்புக்கள், சமகூலி என பலவிடயங்களில் தமிழர் வாழ்வியலில் பால்நிலை மனப்பாங்குகளின் ஆதிக்கம் மாற்றத்திற்குள்ளாகியிருப்பதை அவதானிக்க் கூடியதாக உள்ளது.

கல்வியினை நோக்கும் போது தமிழ் சமூகத்தினைப் பொறுத்தவரையில் ஆரம்பகாலத்தில் பெண்ணிற்கான கல்வி மறுக்கப்பட்ட நிலையே காணப்பட்டது. ஆனால் தற்காலத்தில் அவ்மனப்பாங்கு மாற்றமடைந்து ஆண்களிற்கு நிகராக பெண்கள் கல்வி கற்கின்றனர்.

**'ஓர் ஆண் கற்பதால் அவன் மட்டுமே கற்கிறான்,**

**மாறாக ஒரு பெண் கற்கும் போது அந்த மொத்த சமூகமுமே கற்கின்றது'(9)**

என்ற சீனப் பழமொழிக்கேற்ப சமுதாயத்தில் குடும்பத்தை கொண்டு செல்லவும், குடும்பத்தை சிறப்பாக நிர்வகிக்கவும் பெண்ணின் அறிவு இன்றியமையாதது. வீட்டில் அடைந்து கிடந்த பெண்கள் விண்வெளிப்

பிரயாணம் செய்யுமளவிற்கு பெண்களின் கல்வியறிவு தற்காலத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. தமிழ் சமூகத்தினைப் பொறுத்தவரையில் பெண்கள் படிப்பதும் வேலைக்குப் போவதும் தவிர்க்க முடியாத அம்சமாகக் தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றது. இவ் மாற்றமானது பால்நிலை மனப்பாங்கில் தமிழ் சமூகத்தில் ஆரம்பத்தில் பெண்கள் அடுப்பூதவும், பிள்ளைகளை பெற்று வளர்ப்பதற்குமே உருவாக்கப்பட்டவர்கள் என்ற மனப்பாங்கை உடைத்தெறிந்து இருபாலரிற்கும் சமமான கல்வியுரிமையினை பெறக் கூடியளவிற்கு தற்காலத்தில் பால்நிலை மனப்பாங்கு தமிழர் சமுதாயத்தில் ஏற்புடையதாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது. பல்வேறு சமூக, பொருளாதாரக் காரணிகளால் பெண்களின் பாடசாலைக்கல்வி பாதியிலே நிறுத்தப்படுகின்றன. திருமணம், குடும்ப வாழ்வியல், சமூக மரபுகள் போன்றன பெண்களின் கல்வியைப் பாதிக்கின்றன. இருந்த போதும் ஒப்பீட்டளவில் ஆரம்ப காலத்தினை விட தற்காலத்தில் கல்வியுரிமையில் தமிழ் சமூகத்தில் பால்நிலை மனப்பாங்கில் நேரான மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**“உத்தியோகம் புருஷலட்சணம்”** என்பதற்கிணங்க பொருளாதார பலம் என்பது ஆண்களிற்குரியதாகவே நோக்கப்பட்டது. ஆண்கள் பொருளீட்டுபவராகவும், பெண்கள் வீட்டைப் பராமரிப்பவர்களாகவுமே நோக்கப்பட்டனர். ஆனால் தமிழ் சமுதாயத்தினைப் பொறுத்தவரையில் தற்கால பால்நிலை மனப்பாங்கானது ஓரளவு மாற்றமடைந்ததாகக் காணப்படுகின்றது. அதாவது குடும்பங்களில் பொருளாதாரப் பங்களிப்பில் ஆண், பெண் இருபாலரும் பங்களிப்பவராக உள்ளனர். அத்துடன் பெண்களின் பெயர்களில் சொத்துரிமைகள் வழங்கப்படுகின்றமையும், பல பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் தமிழ் சமூகத்தில் உருவாகிவருவதும் குறிப்பிடத்தக்கது. மாறிவரும் இவ் நவீன உலகில் பொருளாதாரப் பங்களிப்பில் இரு பாலரினதும் பங்களிப்பு காணப்பட்டாலும் பால்நிலை மனப்பாங்கு நிலையில் பொருளாதாரத்தினைப் பொறுத்தவரையில் பெருமளவான மாற்றங்கள் ஏற்படவில்லை என்றே கூறலாம்.

தொழில் என்பது ஆண்களிற்கான கௌரவமாக நோக்கப்படுகின்றது. இதனடிப்படையில் பெண்கள் தாம் தொழில் புரிந்து பொருளாதார நிலையில் வலுப்பெற்றிருந்தாலும் பொருளாதார பலமற்ற ஆண்களை திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள். அத்துடன் குடும்பத்திலும் ஆண்களே குடும்பத்தைப் பார்க்கவேண்டும் என எண்ணி அவர்களது உழைப்பையே நம்பியுள்ளார்கள். தொழில் புரியாத ஆண்களையும் சமூகத்தில் மதிப்பதில்லை. இந் நிலை பால்நிலை மனப்பாங்கின் தாக்கமாகும். மேலும் தமிழர் சமுதாயத்தில் திருமணத்தின் பின் தொழில்புரிய பெண்களை அனுமதிக்கும் நிலை தற்காலத்தில் காணப்பட்டாலும், தொழில், கல்விநிலையில் திருமணத்தின் பின் பெண்களின் வாழ்க்கை குடும்பத்திற்குள் முடங்கிப்போவதாகவே உள்ளது.

பொருளாதாரப் பங்களிப்பில் ஒரு குடும்பம் என்ற அமைப்பு திருமணத்தின் மூலம் உருவாக்கப்படுகின்றது. இதில் பெண்ணின் பொருளாதாரப் பங்களிப்பிற்காக “சீதனம்” என்ற வழக்கு உருவாகியது. தமிழர் வாழ்வியலில் சீதனம் என்ற விடயம் திருமணத்தில் முக்கிய அம்சமாகவுள்ளது. ஆரம்பத்தில் சீதனம் பெண் வீட்டார் சார்பில் பொருளாதாரப் பங்களிப்பாக வழங்கப்பட்டது. ஆனால் தற்காலத்தில் தொழில் புரியும் பெண்களிற்கு கூட சீதனம் வழங்கப்படுகின்றது. தற்காலத்தில் தமிழ் சமூகத்தில் சீதன வழக்கானது ஆணின் பெறுமதியினை, தகுதியினைக் குறிப்பதாக நோக்கப்படுவதுடன் பெண் வீட்டினரால் மாப்பிளைக்கு செய்யும் கௌரவமாகவும் கருதப்படுகிறது. இதன் மூலம் தமிழர் வாழ்வியலில் பால்நிலைமனப்பாங்கானது பொருளாதார ரீதியாக பெண்களிற்கு உரிமைகள்

வழங்கப்பட்டாலும் அடிப்படையில் சமூகத்தில் முழுமையான மாற்றம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருமணநிலையினை எடுத்துநோக்கின் தற்காலத்தில் பால்நிலை மனப்பாங்கில் தமிழர் சமூகம் பல மாற்றங்களை ஏற்றுகொண்டதாகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில், ஆரம்ப காலங்களில் கணவனை இழந்தபின் மொட்டையடித்தல், வீட்டில் முடங்கியிருத்தல் என அவர்களது வாழ்க்கை ஒடுக்கப்பட்டது. ஆனால் தற்காலத்தில் கணவனை இழந்த பெண்கள் தைரியமாக வெளியே நடமாடவும், மறுமணம் செய்து கொள்ளுமளவிற்கு பால்நிலை மனப்பாங்கானது மாற்றமடைந்துள்ளது. மேலும் விவாகரத்துநிலை எனும் போது ஆரம்பகாலங்களில் கணவன் எந்தளவு தான் கொடுமைப்படுத்தி, துன்புறுத்தினாலும் ‘‘கல்லானாலும் கடவுள், புல்லானாலும் புருஷன்’’ என தம் கணவனை விலகாது சமூகத்திற்காக வாழ்ந்துவந்தார்கள். ஆனால் தற்காலத்தில் தம் வாழ்வை முடிவெடுக்கும் தைரியத்துடன் பெண்கள் தம் மனதளவில் மாறியுள்ளமை வரவேற்கத்தக்கது. பெண்களிற்கு சார்பாக பல சட்டவிதிமுறைகளும் இயற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இருந்தபோதும் எந்நிலையிலும் பெண்கள் மீதே பழி கூறும் தன்மை தமிழ் சமூகத்திடம் காணப்படுவது பால்நிலை மனப்பாங்கின் அடிப்படையாகும்.

பால்நிலை மனப்பாங்கில் பெண்கள் கவர்ச்சிக்குரியவர்கள் என்ற போக்கு இன்று தொட்டும் தொடரப்படுவதாகவே காணப்படுகின்றது.ஆரம்ப காலங்களில் கோவில்களில் பெண்தெய்வங்களின் சிலைகளை கவர்ச்சியாக அமைத்தல், இலக்கியங்களில் பெண்களின் உடலமைப்பினைப் பற்றி பாடுதல் என்பன பெண்களை கவர்ச்சிப் பொருளாகக் காட்டும் தன்மையிலாகும். இவ் மனப்பாங்கு தற்காலம் வரையிலும் தொடர்வதை காணமுடிகின்றது. அந்தவகையில் விளம்பரங்கள், பத்திரிகைகளில் பெண்களின் கவர்ச்சிப் படங்களையே பதிவிடுகின்றனர். இந் நிலை பால்நிலை மனப்பாங்கு நிலையில் பெண்களை கவர்ச்சிப்பொருளாக பார்க்கும் நோக்கு மாற்றமடையவில்லை என்பதைக் காட்டுகின்றது.

இவ்வாறாக தமிழர் சமூகத்தில் பால்நிலை மனப்பாங்கானது அவர்களது வாழ்வியலுடன் பிண்ணிப்பிணைந்ததாகக் காணப்படுவதுடன், முன்னைய காலத்தினை விட தற்காலத்தில் சமூக மாற்றங்களிற்குட்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

**முடிவுரை**

தமிழர் வாழ்வியலில் பால்நிலைமனப்பாங்கு எனும் இவ்வாய்வில் பால்நிலை மனப்பாங்கானது தமிழர் சமூகத்தில் ஆரம்பகாலத்தில் எந்நிலையில் காணப்பட்டது அப்பால்நிலை மனப்பாங்குகள் தற்காலத்தில் எந்தளவில் மாற்றமடைந்துள்ளது என்பதனை அறியக் கூடியதாய் அமைந்தது.

மேலைத்தேய நாடுகளில் பால்நிலை என்பது பகுத்தறிவு ரீதியில் அமைய, கீழைத்தேய நாடுகளில் சமூக சீர்திருத்தம் என்றடிப்படையில் அமைகின்றது. அந்தவகையில் பால்நிலை மனப்பாங்கு பற்றிய எதிர்பார்ப்புக்கள் தமிழ் சமூகத்திலே ஆரம்ப காலத்தினை விட ஒப்பிட்டளவில் மாற்றமடைந்துள்ளதாகவே காணப்படுகின்றது. இருந்தபோதும் மறைமுகமாக பால்நிலை மனப்பாங்குகள் அனைத்து விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்துவதாகவே உள்ளது. பெண்கள் தம்மைக் கீழானவர்களாக எண்ணும் போதுதான் ஆண்கள் மேன்மையடைகின்றனர். இதனடிப்படையில் பெண்கள், கல்வி பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்தாலும்கூட அவர்கள் தம்மை ஆண்களிற்கு கீழானவர்களாகவே எண்ணுவதால் அவர்களால் முழுமையான வெற்றியினை அடையமுடியாது. இதற்கு

அடிப்படைக்காரணம் பிறப்பிலிருந்தே சமூகத்தினால் கற்பிக்கப்பட்டு வந்த பால்நிலை மனப்பாங்குகளாகும்.

தமிழர் வாழ்வியலில் பால்நிலை மனப்பாங்குகள் தற்காலம் வரையிலும் ஆரம்பகாலத்துடன் ஒப்பிட்டளவில் மாற்றங்களிற்குட்பட்டாலும் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ குடும்பம், சமூகங்களில் தாக்கம் செலுத்துவதற்கு முக்கிய காரணம் பெண்கள், தாம் பெண் சுதந்திரம் என்ற பெயரில் எல்லை மீறிய சுதந்திரத்தினை எடுத்துக்கொள்வதாகும். தமிழ் கலாசாரங்களிற்கு புறம்பாக தற்காலத்தில் அதிகரித்து வரும் பாலியல் வன்முறைகள், வன்செயல்களிற்கு எல்லை மீறிய பெண்சுந்திரமும் ஓர் காரணமாக உள்ளது. அதாவது பெண்கள் தம்மை ஆண்களிற்கு சமமாக எண்ணி நடை, உடை பாவனைகளில்தான் சுதந்திரம் உண்டென தம்மை சுதந்திரமடைந்தவர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்கின்றார்கள்.

முன்னையகாலப் பெண்கள் அடிமைகளாக இருந்தாலும் அவர்களின் உரிமைகள் பறிக்கபட்டாலும் அமைதியாக இருந்தனர். அளவுமீறிச் செயற்படவில்லை. ஆனால் இன்றைய காலப் பெண்கள் தம் சுதந்திரத்தினை அளவு மீறிப் பயன்படுத்துவதனால் சமூகமானது அதிகளவில் பாதிக்கப்படுகின்றது. பெண் என்பவள் அடக்கம், தாய்மை, பொறுமை, கனிவு கொண்டவளாக நோக்கப்படுகின்றாள். இவ்வாறான உயரிய பண்புகளைக் கொண்ட பெண்களையே இற்றைக்கும் உலகம் போற்றுகின்றது. இப்பண்புகளுடனேயே பெண்கள் தம்மை வளர்த்துக்கொள்ளவும் , தம் உரிமைகளையும் வென்றெடுக்க வேண்டும். இத் தன்மையுடனான சுதந்திரப் பெண்களையே பாரதியும் காண விரும்பினார்.

தமிழர் வாழ்வியலில் பால்நிலை அடிப்படையிலேயே பெண்களிற்கென உயரிய பண்புகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பெண்களே உணர்வுகளைக் கட்டியாள்பவளாகப் போற்றப்படுகின்றாள். ஆனால் தற்காலப் பெண்கள் உணர்வுகளை ஆளவில்லை, அவர்களைத் தான் உணர்வுகள் ஆளுகின்றன. இந்த வகையில் பெண்கள் தம் பால்நிலை மனப்பாங்கு நிலையிலிருந்து வெளியேற எண்ணினாலும் அவர்களது தவறான வழிமுறைகள், எதிர்பார்ப்புக்களால் சமூகத்தில் பல பிரச்சினைகளிற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. எனவே ஆணாயினும், பெண்ணாயினும் ஒவ்வொருவரும் தம் எண்ணங்களில் மாற்றத்திற்கு வழிவிடும் போதே சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

எனவே, தமிழர் வாழ்வியலினைப் பொறுத்தவரையில் பால்நிலை மனப்பாங்கு மாற்றமானது கல்வி, பொருளாதாரம், சொத்துரிமை, தொழில், சமமான கூலி போன்றவற்றில் பால்நிலை மனப்பாங்களவில் ஆரம்ப காலத்துடன் ஒப்பீட்டளவில் மாற்றமடைந்துள்ளதுடன், இப் பால்நிலை மனப்பாங்குகளே தமிழர்களின் பண்பாடுகள், ஒழுக்க நெறிகளிற்கும், அவர்களது வாழ்க்கையினைக் கட்டியெழுப்புவதற்கும் ஊன்று கோலாக திகழ்கின்றது.

**அடிக்குறிப்புக்கள்**

1. டாக்டர்,இரா,பிரேமா.,பெண்ணியம் அணுகுமுறைகள்.,பக்கம் 123.
2. மேலது., பக்கம் 74.
3. ஜீவாநந்தம்,பா.,புதுமைப் பெண்.,பக்கம் 70.
4. தமிழ்த் துறை பேராசிரியர்கள்.,பெண்ணும் பெண்மையும் (கலை-இலக்கிய-அறிவியல் பார்வை).,பக்கம் 19.
5. ஜீவாநந்தம்,பா.,புதுமைப் பெண்., பக்கம் 88
6. மேலது., பக்கம் 75.
7. பி,இராஜகரன்.,ஆணாதிக்கமும் பெண்ணியமும்., ாக்கம் 217.

8. மேலது., பக்கம் 218.
9. மேலது., பக்கம் 210.

**உசாத்துணைகள்**


1. ஜீவாநந்தம்,பா.,புதுமைப் பெண்.,தியாகராயா பிறின்டஸ்.,சென்னை-17.,ஜனவரி 1968.
2. தமிழ்த் துறை பேராசிரியர்கள்.,பெண்ணும் பெண்மையும் (கலை-இலக்கிய-அறிவியல் பார்வை).,நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 600 098., டிசம்பர் 2008.
3. டாக்டர்,இரா,பிரேமா.,பெண்ணியம் அணுகுமுறைகள்.,தமிழ் புத்த காலயம்,தியாகராஜ நகர்,சென்னை 600 017.,1998.
4. திருமதி,பாரதிகுமார்.,பெண்ணிண் பெருமை-ஓ'ோ.,கண்ணதாசன் பதிப்பகம், தியாகராஜ நகர்,சென்னை 600 017.,ஏப்ரல் 2004.
5. பி,இராஜகரன்.,ஆணாதிக்கமும் பெண்ணியமும்.,கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை 600 002.,2001.
6. https://en.wikipedia.org/wiki/Gender-inquality-in-Sri-lanka
7. https://slijss,sljo/.info/articles/10:4038/slijss.v4012.75401
8. www.sciencedirect.com/science/articels/.../s036013151630200
9. https://do.org/10.101b/j.sbspro.2013.04.349